அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 36/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு. 07
1992, டிசம்பர் மாதம் 18 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதான செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
பகுதிச் செயலாளர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட முறைச் சபைகளின்
தலைவர்கள் / தகுதி வாய்ந்த அதிகாரிகள்.

அரசகரும மொழிகள் சட்டத்தை செயல் முறைப்படுத்துவதற்கான உள்ளமைப்பை தயாரித்தல்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு யாப்பின் அத்தியாயம் 1VIஇல் எதிர்பார்க்கப்பட்டவாறு மொழிச் சட்டத்தைப் பொது மக்கள் சுதந்திரமாக உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஆகவே மொழிச்சட்டத்தை செயல் முறைப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய விதத்தில் அமைச்சுக்களினதும் திணைக்களத் தலைவர்களினதும் விசேட கவனத்தை கோர வேண்டியது அவசியமாகின்றது.

02. இன்று நடைமுறையிலுள்ள மொழிச்சட்டம் மும்மொழிகளுள் அதாவது, சிங்களம், தமிழ், ஆங்கிலம் இவற்றில் ஏதாவது ஒரு மொழியில் அரசாங்க நிறுவகங்களுடன் தொடர்பு கொண்டு கருமமாற்றுவதற்கான உரிமையை ஒரு குடிமகனுக்கு வழங்குகின்றது. ஆதலின் எல்லா அரசாங்க நிறுவகங்களும் குடிமகனின் இத்தகைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் நிலையில் இருக்க வேண்டும்.

..2

03

03. இதன் தொடர்பில் இன்றுள்ள மிகப் பெரிய இடர்ப்பாடு மாகாண, மாவட்ட பகுதி மட்டங்களில் இம்மொழிகளில் ஆற்றல் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு நிலவும் பற்றாக்குறையே ஆகும். இச்சந்தர்ப்பத்தில் ஒரு மொழி அறிவு மட்டுமேயுள்ள பொது மக்கள் அரசாங்கத்தில் கொண்டுள்ள நம்பிக்கையை இழப்பர் என்பது தெளிவாகின்றது.

04. அரச உத்தியோகத்தர்களுக்கான மொழி கற்பிக்கும் நடவடிக்கை ஏலவே ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற போதிலும் மொழி கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டம் பூர்த்தியாகும் காலம் வரையும் மொழிச் சட்டத்தை செயல் முறைப்படுத்துதல் தாமதிக்கப்படக் கூடாது. ஆகவே ஒவ்வொரு நிறுவகத்தின் தலைவரும் குறைவான இனத்தவரின் மொழியில் அறிவுள்ள உத்தியோகத்தரில் ஆகக் குறைந்தது ஒருவரையாவது தனது தாபனத்தில் வைத்திருக்க வேண்டுமெனக் கோரப் படுகின்றார்.

05. மேலும் தமது நிறுவகங்களுக்கான தட்டச்சு இயந்திரங்கள் போன்ற சாதனங்களை வழங்குவதற்கும் தட்டச்சாளர்களுக்கான பதவிகளை உண்டாக்கி அவற்றிற்கான ஆளணியினரை அந்தப் பதவிகளுக்கு நியமிப்பதற்குமான அவசிய தேவையை இட்டும் கவனம் செலுத்துமாறும் எல்லா நிறுவகங்களின் தலைவர்களினதும் கவனம் ஈர்க்கப்படுகின்றது. தனது தாய் மொழி தவிர்ந்த வேறு ஒரு மொழியில் கருமமாற்றக் கூடிய ஓர் எழுதுநர் இருக்கும் சந்தர்ப்பங்களில் அம்மொழி சார்ந்த ஓர் தட்டச்சாளரை நியமிக்கக் கோருவதற்குப் பதிலாக அம்மொழி ஆற்றலுள்ள எழுதுநரை அம்மொழியில் தட்டச்சிடப் பயிற்றுவித்து அவர் செய்யும் தட்டச்சு வேலைக்கானதோர் மேலதிகப்படியை அவருக்கு வழங்குதல் விரும்பத்தக்கது.

06. தமது எல்லைக்குள் வரும் திணைக்களங்களிலும் தாபனங்களிலும் மொழிச் சட்டம் செயல் முறைப்படுத்தப்படுவதில் உள்ள முரண்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை நேரடியாக கவனிக்குமாறு எல்லா செயலாளர்களும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

07. இனிவரும் காலத்தில் மொழித் தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர்களில்லை என்பதும் சாதனங்கள் இல்லை என்பதும் போன்ற காரணங்களெவையும் மொழிச்சட்டம் அனுசரிக்கப்படாததற்கான காரணங்களாக அரசாங்கம் ஏற்கக் கொள்ளமாட்டாது.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.